பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4
11 06 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா உட்பட மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பல அமைச்சர்கள் இன்று தங்களது இலாகா பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.
2. நடப்பு ஆண்டிற்கான இளநிலை நீட் தேர்வுக்கான கலந்தாய்வை நிறுத்தி வைக்க உச்சநீதிமன்றம் இன்று மறுத்துவிட்டது.
3. அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பெரும் பங்கு வகிப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முன்கூட்டியே இம்மாதம் 20-ஆம் தேதி தொடங்கும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தெரிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் - கனடாவை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான அமைச்சர்கள் இன்று தங்களது இலாக்கா பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உள்துறை அமைச்சராக திரு அமித்ஷா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு சிவராஜ்சிங் சௌஹான், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளின் நலனுக்காக தமது அமைச்சகம் விரைந்து செயலாற்றும் என்றும் அவர் கூறினார்.

மத்திய கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு கஜேந்திரசிங் ஷெகாவத், தமது துறை மூலம் நாட்டிற்கு தனித்துவமிக்க புகழையும் பெருமையையும் சேர்க்க இருப்பதாக தெரிவித்தார்.

சுற்றுலா அமைச்சகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு ஜித்தன்ராம் மாஞ்சி, வளர்ச்சிக்காகவும், ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உள்ளதாகத் தெரிவீத்தார்.

சட்டம் மற்றும் நீதித்துறை தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு அர்ஜூன்ராம் மெக்வால், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண்பதற்கு தமது அமைச்சகம் உயர் முன்னுரிமை அளிக்கும் என்று கூறினார்.

திரு ஹர்தீப்சிங்பூரி பெட்ரோலியத்துறை அமைச்சராகவும், திரு ஜிதேந்திர பிரசாத் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகராவும், திரு கிரண் ரிஜிஜூ சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகராவும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சராக திருமதி அன்னபூர்ணா தேவியும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் எல் முருகன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், வளர்ச்சியடைந்த பாரதத்துக்கான திட்டங்களுக்கு உத்வேகம் அளிப்பதிலும் தமது அமைச்சகம் சிறப்பாக செயலாற்றும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டிற்கான இளநிலை நீட் தேர்வுக்கான கலந்தாய்வை நிறுத்தி வைக்க உச்சநீதிமன்றம் இன்று மறுத்துவிட்டது.

இது தொடர்பான மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த மே மாதம் ஐந்தாம் தேதி நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு பதிலளிக்குமாறு தேசிய தேர்வுகள் முகமைக்கு உத்தரவிட்டது.

விசாரணையை அடுத்த மாதம் எட்டாம் தேதிக்கு ஒத்தி வைப்பதாக கூறிய நீதிமன்றம், இது தொடர்பான மற்றொரு மனுவும் அன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியது.

**[]<<<>>>[]**

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பெரும் பங்கி வகிப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்களிடையே இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், அடுத்து வரும் நாட்களில் பல திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ தொடங்கப்படும் என்றும், இது இளைய தலைமுறையினரின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் மேற்கொள்ளப்படும் மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செய்ய வேண்டுமென்றும் முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சர் மக்களை சந்திக்கும் திட்டம் அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல் இரண்டு மாதங்களுக்கு ஊரக பகுதிகளில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

கிராமப்புற பகுதிகளில் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ள காலை உணவு திட்டத்தை கண்காணிக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

வருவாய்த்துறையில் பட்டா மாறுதல்., சான்றிதழ்களை பெறுதல் ஆகியவற்றில் பொதுமக்களுக்கு உள்ள சிரமங்களை களைவதற்கு தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்ட திரு மு க ஸ்டாலின், போதைப்பொருள் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இம்மாதம் 24-ஆம் தேதிக்குப் பதிலாக முன்கூட்டியே இம்மாதம் 20-ஆம் தேதி தொடங்கும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து முன்கூட்டியே பேரவை கூட்டப்படுவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் திமுக சார்பில் திரு அன்னியூர் சிவா போட்டியிடுவதாக அக்கட்சி இன்று அறிவித்துள்ளது.

அந்த தொகுதியின் திமுக சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி காலமானதை அடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்க ஆறு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு பழனி தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தொகுதியில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக கடைபிடிக்கப்படும் என்று கூறினார்.

[]<<<>>>[]

சென்னை கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவ மனையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவையை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியம் இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், யோகா பயிற்சி முதியோர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் பக்க விளைவுகள் இல்லாத நீராவி குளியல், மசாஜ், யோகா சிசிக்சை, உபவாச சிகிச்சை, மண் குளியல், காந்த சிகிச்சை இயற்கை உணவு சிகிச்சை, மூலிகை சிகிச்சை போன்றவைகள் இந்த மருத்துவமனையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுபோன்ற சிகிச்சை அவர்களின் உடலையும், உள் உறுப்புகளையும் வலுப்படுத்தும் என்றும் திரு மா சுப்ரமணியன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள மத்திய காலணி பயிற்சி நிறுவனத்தில் தொழிற் கல்வி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இன்று முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்படுவதாக ஆட்சியர் திரு சர்வன் குமார் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கோதை ஆறு மற்றும் திற்பரப்பு அருவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் திற்பரப்பு அருவியில் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கி பயில விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், கொல்லிமலை, சேந்தமங்கலம், மோகனூர் உள்ளிட்ட எட்டு வருவாய் வட்டங்களில் இன்று தொடங்கிய தீர்வாயத்தில் ஆட்சியர் உட்பட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்,

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் - கனடாவை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் நடைபெறும் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

தோஹாவில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 9.15-க்கு தொடங்குகிறது.

**End of News**